IN THE COURT OF DISTRICT MUNSIF, KATPADI, VELLORE DISTRICT.

O.S.No. 118 /2014

Deposition of witness for PW1

| | | | |
|---|---|---|---|
| Name | : கிருஷ்ணன் | Caste | : - |
| Father's Name | : மார்கபந்து | Calling | : - |
| Village | : முத்தரசிகுப்பம் கிராமம் | Religion | : இந்து |
| Taluk | : காட்பாடி | Age | : 59 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873

of the 17 day of September, 2019.

Cross Examination Continuation

தாவா சொத்திற்கு சுவாதீனத்தில் இருப்பதற்கு ஆதாரம் எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் 1994-லிருந்து 2000-க்கான வரிரசீதுகளை தாக்கல் செய்துள்ளேன். பட்டா யார் பெயரில் உள்ளது என்றால் நீலமேகம் பெயரில் உள்ளது. பட்டா என் பெயரில் பெறுவதற்கு முயற்சி எடுத்து வருகிறேன். அதற்கு ஆதாரமாக எதையும் நான் தாக்கல் செய்யவில்லை. அடுத்த வாய்தாவிற்கு தாக்கல் செய்கிறேன். எனது தந்தையிடம் எனக்குரிய பாகத்தை பெற்றுக்கொண்டு திருமணம் ஆனபின்பு பெங்களூர் சென்று லாரி வாங்கி செட்டில் ஆகிவிட்டேன் என்றால் சரியல்ல. நான் எனது தகப்பனார் பெற்ற கடனை அடைப்பதாக உறுதிமொழி சொன்னதால் தான் இந்த கூர் சீட்டு எழுதப்பட்டது என்றால் சரியல்ல. கூர்சீட்டு எழுதியபிறகு எனது தகப்பார் பெற்ற கடன்களை நான் அடைக்காத காரணத்தினால் எனது பெற்றோர் பிரதிவாதி பெயருக்கு செட்டில்மெண்ட் ஆவணம் எழுதி வைத்தார்கள் என்றால் சரியல்ல. தாவா சொத்தில் சுவாதீனம் பிரதிவாதி வசம் உள்ளது என்றால் சரியல்ல என் வசம் தான் உள்ளது. தாவா சொத்து எனது பெற்றோரின் சுயசம்பாத்திய சொத்து என்றும், அதை பொறுத்து செட்டில்மெண்ட் ஆவணம் எழுதி வைக்க அவர்களுக்கு உரிமை உள்ளது என்றால் சரியல்ல. எனக்குரிய பாகத்தை 40 வருடங்களுக்கு முன்பே நான் பெற்றுக்கொண்டேன் என்றும்,

தற்பொழுது தாவா சொத்தினுடைய சந்தை மதிப்பு உயர்ந்துள்ளதால் நான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எனது சகோதரர் சதாசிவத்தை இந்த வழக்கில் தரப்பினராக சேர்க்காததால் இவ்வழக்கை தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

(Sd/-)..R.Rajamaheswar
DISTRICT MUNSIF
KATPADI.